2017 ஜனவரி 24]

(ஆ) திரு. சுர்ஜித் சிங் பர்னாலா, தமிழக முன்னாள் ஆளுநர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாட்டின் ஆளுநராக 1990 முதல் 1991 வரை மற்றும் 2004 முதல் 2011 வரை பணியாற்றிய திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் 14-1-2017 அன்று தனது 91-வது வயதில் இயற்கை எய்தியது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

முற்பகல் 10-05

1942 ஆம் ஆண்டு "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தில் பங்கேற்றவரும், சிறந்த தேசியவாதியும், அரசியல் அனுபவமிக்கவருமான திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் பஞ்சாப் மாநில முதலமைச்சராகவும், மத்திய வேளாண்மைத் துறை அமைச்சராகவும், இரசாயனம் மற்றும் உரத் துறை அமைச்சராகவும் பணியாற்றினார். மேலும், உத்தரகாண்ட், ஆந்திரப் பிரதேசம் மற்றும் அந்தமான் நிகோபார் தீவுகளில் ஆளுநராகவும் பதவி வகித்தார்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்ினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

(இ) திரு. சோ. ராமசாமி, பத்திரிகை ஆசிரியர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மூத்த பத்திரிகையாளரும், "துக்ளக்" பத்திரிகை நிறுவன ஆசிரியரும், வழக்கறிஞரும், நடிகரும், நாடக ஆசிரியரும், அரசியல் விமர்சகரும் எனப் பன்முக ஆற்றலாளரும், மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது அளவற்ற அன்பும், பாசமும் கொண்டிருந்தவருமான திரு. சோ. ராமசாமி அவர்கள் தனது 82-வது அகவையில் 7-12-2016 அன்று மறைவுற்றது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

1957-ல் நாடகங்களை எழுதத் தொடங்கி, "தேன் மொழியாள்" எனும் மேடை நாடகத்தில் இவர் ஏற்று நடித்த கதாபாத்திரத்தின்